# தூமகேது

*சீதாதேவி*

மதுரைக் கீழாவணி மூல வீதியில் ஒரு பெரிய வீடு. காஸ் விளக்குகளும் கொத்து விளக்குகளும் பந்தலில் நிலவை வாரி இறைக்கின்றன. கல்யாணப் பரபரப்பு நிறைந்து எங்கும் ஒரே கூட்டமாக இருக்கிறது. சிட்டுக்குருவிகள் போல் சிறுவர் சிறுமிகள் ஓடி விளையாடுகிறார்கள். பொன்னுசாமிப் பிள்ளை நாயனம் கர்ணாமிருதமாக ஒலிக்கிறது. ஊர்வலத்துக்குப் புறப்பட்ட பெண்டுகள் கூட்டங் கூட்டமாக வந்து கூடினர். சந்தனம், புஷ்பம், சர்க்கரை முதலிய மங்கலப் பொருள்களைக் கூடத்தில் கொண்டுவந்து வைப்பதில் சிலர் முனைந்தனர்.

அன்று நான்காம் நாள் கல்யாணம். வக்கீல் குப்புசாமி ஐயர் என்ற குப்பண்ணா அவர்களின் ஒரே பெண் சரஸ்வதியைச் சிங்கா நல்லூர்ச் சுந்தரமையரின் ஏக புத்திரன் சுப்பு என்கிற சுப்பிரமணியனுக்குப் பாணிக்கிரகணம் செய்து கொடுத்தார். பெண்ணுக்கு வயசு பதின்மூன்று; மாப்பிள்ளைக்கு வயசு பதினேழு.

சம்பந்தியம்மாள் மீனாட்சி சாட்சாத் லட்சுமிபோல் இருந்தாள். அவள் அணிந்திருந்த கடிகாரச் சங்கிலி, பெண்கள் எல்லாரையும் கவர்ந்தது. இருபது பவுன்! எடுத்த கை இற்றுப் போகும்போல் இருந்தது. இந்தக் காலத்துக்கு இது பழைய மோஸ்தர்தான், ஆனால் நாற்பது வருஷத்துக்கு முன் - இந்தச் சம்பவம் நடந்த காலத்தில் - அது புத்தப் புது மோஸ்தர்.

மற்ற எல்லாரும் வங்கி, காசுமாலை, கொடி என்று ஒரே பாணியில் நகை போட்டுக்கொண்டிருக்க, இவள் மட்டும் நேற்று வந்த புதிய தினுசுச் சங்கிலி அணிந்திருந்தது அங்கிருந்த பெண்டுகளுக்கெல்லாம் அவளிடத்தில் மதிப்பையும், அவளிடம் பேசத் தயக்கத்தையும் உண்டாக்கியது.

ஊர்வலத்துக்கு ஸாரட்டு வர நேரமாயிற்று. அவரவர்கள் மனம் போனபடி கூடிக் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒரு மாதுளம் விதை அளவுள்ள எட்டுச் சிவப்புக் கல்லோடு, காவடி உட்பட இரண்டு பவுன் தங்கம் கொண்ட தோடு ஒன்று, காலணா அளவுள்ள காதுத் துளையிலிருந்து ஊசலாட, ஒரு பாட்டி மீனாட்சியினிடம் வந்து பேச்சுக் கொடுத்தாள். பிறகு, "என்ன, சம்பந்தியம்மா? நீங்கள் என்னவோ புதுச் சங்கிலி பண்ணிக்கொண்டிருக்கிறீர்களாம். எங்கள் வீட்டுப் பெண்களும் பேத்திகளும் நேற்றி

லிருந்து என்னைத் துளைக்கிருர்கள். அது மாதிரி அவர்களுக்குப் பண்ணிப் போடவேண்டுமாம். எங்கே சற்று அதைப் பார்க்கிறேன். இப்படிக் கையில் கொடுங்கள்'' என்று சொல்லி வாங்கிப் பார்த்தாள்.

''சங்கிலி அழகாகத்தான் இருக்கிறது. ஆனுல் இந்தப் பவுனைச் சுமக்கவே இந்தக் காலத்துக் குட்டிகளுக்குத் திராணி இல்லையே! போதும், போதும்! என் நாட்டுப் பெண் போட்டுக்கொண்டிருக்கிருள், பாருங்கள்! அந்தக் கொடி பதினைந்து பவுன்'' என்ருள்.

மீனுட்சி, ''ஏன் பாட்டி, ஒரு கொடிக்குப் பதினைந்து பவுன் போட்டால் கழுத்து நிறைந்திருக்கிறதா? இதுவானுல் கழுத்து நிறைந்திருக்கிறது, பாருங்கள். போன வருஷம் பட்டணத்துக்குப் போயிருந்தபோது வாங்கிக்கொண்டு வந்தேன்'' என்ருள்.

''ஆமாம்; பட்டணத்திலேதான் தினத்துக்கு ஒரு நாகரிகம் மாறிக்கொண்டிருக்கிறதே! நீங்கள் சொன்னுற்போல, கொடி இது மாதிரி கழுத்து நிறைந்து இருக்காதுதான். ஜாக்கிரதையாகக் கழுத்திலே சங்கிலியைப் போட்டுக்கொள்ளுங்கள். ஜாக்கிரதை அம்மா, ஜாக்கிரதை! கொடி என்றதும் ஞாபகம் வருகிறது. என் நாட்டுப் பெண்ணுக்குப் பக்கத்தகத்துப் பெண் ஒரு நாழியிலே கழுத்துக் கொடியைத் தொலைத்துவிட்டு வந்து நின்ருள். அதுவும் இவளுடையது மாதிரி நாயுருவிக் கொடிதான்'' என்ருள் பாட்டி.

இதைக் கேட்டதும் மீனுட்சிக்குத் திக்கென்றது. ''பாட்டி, பதினைந்து பவுன் நகை கழன்று விழுந்ததுகூடத் தெரியாமல் இருக்குமா ஒருத்திக்கு? அவள் என்னத்தனை சமர்த்துப் போல் இருக்கிறது!'' என்ருள் மீனுட்சி.

''கொடி மட்டுமா? கொடியில் இரண்டு திருமங்கிலியம். கல்லுக் கல்லாக இரண்டு மோர்கராக்கள். ஆடி வெள்ளிக்கிழமையும் அதுவுமாக!''

இதற்கு மேல் மீனுட்சியால் கேட்க முடியவில்லை. தலை சுற்றியது. நெஞ்சில் சம்மட்டி கொண்டு அடிப்பதுபோல் இருந்தது. கழுத்துச் சங்கிலி, பாம்பாகப் படம் எடுத்து ஆடுவதுபோல் இருந்தது.

''பாட்டி, நல்ல நாளும் அதுவுமாக, கல்யாணப் பந்தலில் ஒன்றும் சொல்லாதீர்கள். கேட்கக் கேட்க எனக்கு மனசுக்குக் கஷ்டமாக இருக்கிறது. நாங்கள் இரண்டு பேரும். ஆளுக்கு ஒரு கருக்காயை வைத்துக்கொண்டு கல்யாணம் செய்கிரேம். எங்கேயாவது நன்ருக இருக்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டு, மீனுட்சி அங்கிருந்து நழுவினுள்.

அவள் பெயர் என்ன, எந்த ஊர் என்றெல்லாம் பாட்டியினிடம் கேட்க வேண்டும் என்று நாக்குத் துடித்தது. அப்படிக் கேட்பது உசிதமாக இருக்காது. திடீரென்று அதையெல்லாம் இவள் ஏன்

கேட்கிருள் என்று சந்தேகம் தோன்றலாம் என்ற எண்ணத்தால் கேட்காமல் விட்டுவிட்டாள்.

கல்யாணம், வழக்கப்படி ஐந்து நாள் திமிலோகப்பட்டது. கொஞ்சம் பசையுள்ள குடும்பத்துக் கல்யாணம் ஆனதால், நன்ருகச் சீர் வரிசைகள் செய்தார்கள்.

சம்பந்திகள் ஊருக்குப் புறப்படுவதற்கு முன், முதல் நாள் பேசிய பாட்டியைப் பார்த்து நமஸ்காரம் பண்ணிஞள், மீஞட்சி. பிறகு தயங்கிய குரலில், ''பாட்டி, நேற்று நான் பேசியதைத் தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள். என்னவோ, மனசில் அஞ்ஞானம். பாவம்! நகையைத் தொலைத்த பெண் யார், என்ன என்று விசாரித்திருக்க வேண்டும். சட்டென்று நான் போய்விட்டது உங்களுக்கு வருத்தமாக இருக்கும் என்று அப்புறந்தான் தோன்றியது. உங்களைக் கண்டு மன்னிப்புக் கேட்டால் ஒழிய மனசு நிம்மதி அடையாது போல் இருந்தது. சொல்லிவிட்டேன். இனிமேல் நன்ருகத் தூக்கம் வரும்'' என்று சொல்லிச் சிரித்தாள்.

பாட்டியின் உச்சி குளிர்ந்துவிட்டது. ''அதனுல் என்ன? நானுந்தான் கல்யாணச் சமயத்தில் அந்தச் சங்கதியை உங்களிடம் சொல்லியிருக்க வேண்டாம். ஜாக்கிரதைக்காகச் சொன்னேன்'' என்ருள்.

பக்கத்தில் இருந்த பாட்டியின் நாட்டுப் பெண் என்னவென்று விசாரித்தாள்.

''ஒன்றும் இல்லை; கல்லிடைக்குறிச்சிப் பாகீரதியின் கொடி போனதைப் பற்றிச் சொன்னேன்......''

நாட்டுப் பெண், ''அதுவா? தனுஷ்கோடியில் நடந்த சமாச்சாரம் அல்லவா அது?'' என்ருள்.

மீஞட்சி இதைக் கேட்டதும் நடுங்கிஞள். பேசச் சந்தர்ப்பம் கிடைத்தால் விடாத பாட்டி, ''நகைதான் போச்சு; 'போன நகையைத் திருப்பிப் பண்ணிக்கொண்டு வந்தாலொழிய வீட்டு வாசற்படி ஏருதே!' என்று மாமியார் சொல்லிவிட்டாளாமே!'' என்ருள்.

''அந்தக் கூட்டமே ஈவிரக்கமற்ற கூட்டம், என்னவோ, ராமேசுவரத்துக்குப் போன வேளை, மாணிக்கம் போல் ஒரு குழந்தை பிறந்துவிட்டது. அகமுடையான் அம்மாக் கோண்டுவாஞலும் மனச்சாட்சிக்கும் உலகத்துக்கும் பயந்தவன். அம்மாவைச் சரிக்கட்டி, மனைவியை அழைத்துக்கொண்டு போய்விட்டான்'' என்ருள் நாட்டுப் பெண்.

இதற்குள் வண்டி வந்துவிட்டதென்று அழைக்க ஆள் வந்தது. போய் வருகிறேன் என்று சொல்லி, மீஞட்சி போய்விட்டாள்.

## 2

பதினெட்டு வருஷங்களுக்கு முன் நடந்த செய்தி மீனாட்சியின் மனத்தில் திரைப்படம் போல் நகர்ந்தது. சிங்காநல்லூரில் சுந்தரம் சாதாரண வரும்படி உள்ள ஒரு மிராசுதார். இருக்க வீடும் வருஷாந்தரச் சாப்பாட்டுக்கு நெல்லும் இருந்ததால் கஷ்டம் என்பது இல்லாமல் வாழ்க்கைச் சக்கரம் ஓடிக்கொண்டிருந்தது. கல்யாணம் ஆன சில மாதங்களுக்குள் பெற்றோர் காலமாகி விட்டதாலும், உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லாததாலும் 'நம் மனிதர்' என்று சொல்லிக் கொள்ள அவருக்கு யாரும் இருக்கவில்லை. தம் ஒன்றுவிட்ட அத்தையின் பெண் மீனாட்சியை அவர் கல்யாணம் செய்துகொண்டிருந்ததால், மீனாட்சியின் தாய் சகாயத்துக்காக அடிக்கடி இவர்களுடன் வந்து தங்குவது உண்டு.

லட்சுமி அம்மாள் குடும்ப விவகாரங்களில் கைதேர்ந்த புள்ளி, அக்கம் பக்கங்களில் கல்யாணமோ கார்த்திகையோ எது நடந்தாலும் அந்த அம்மாளின் யோசனையும் உதவியும் இல்லாமல் நடக்காது. நல்ல உபகாரி, ஆனால் தர்க்கம், கட்சி என்று வந்தால், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிப்பதில் அவளுக்கு அவளே நிகர். பாக்கில் அகப்படும் கல்லைப் போலும் பானகத்தில் கிடக்கும் ஈர்க்குப் போலும் சில சமயம் இந்தக் குணம் அவளிடம் தோன்றி, பிறருக்குத் தொல்லை கொடுத்தாலும், மற்றக் குணங்களின் பெருமை அதற்கு மாற்றாக இருந்தது.

மீனாட்சி, தாயின் கைப்பொம்மை. அவளுக்குக் கணவனிடம், அன்பும் பயபக்தியும் இருந்தன. இந்த இரண்டு கரைகளுக்கிடையே அடங்கி ஓடும் ஆறாக இருந்தாள் அவள். கரைகளில் எதையும் உடைத்து அந்த ஆறு பெருகியதே இல்லை. தன் அபிப்பிராயம் என்று ஒன்று, அவளிடம் தனித்துத் தலைதூக்கியதே இல்லை. அப்படிநேர்ந்த சந்தர்ப்பங்களும் மிகக் குறைவே.

கல்யாணமாகி இரண்டு வருஷங்கள் வரையில் குழந்தைகள் பிறக்கவில்லை. அந்த வருஷம் ஆடி அமாவாசைக்குச் சேது ஸ்நானம் செய்துவர வேண்டுமென்று லட்சுமி அம்மாள் சொல்லிக்கொண்டிருந்தாள்.

வைகாசி மாதம் முதல் சுந்தரம் புதிதாக வியாபாரத்தில் இறங்கினார். வெல்லம் நல்ல லாபத்தைக் கொடுக்கும் என்ற உத்தேசத்தால், தாமே நேரில் இருந்து வியாபாரத்தைக் கவனிக்க வேண்டி வந்தது. ஆகையால் ராமேசுவர யாத்திரைக்கு அவர் போக முடியவில்லை.

எப்படியாவது பெண்ணையும் மாப்பிள்ளையையும் அந்த அமாவாசைக்கு ராமேசுவரம் அழைத்துப்போக வேண்டுமென்று லட்சுமியம்மாள் துடித்தாள். புறப்படக் குறிப்பிட்ட இரண்டு நாட்களுக்கு

முன்னதாகவே மாப்பிள்ளை வந்த சமயத்தில் பிரயாணத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள்.

மாப்பிள்ளை சம்மதம் கொடுத்துவிட்டார்.

"அப்படியானால் நீங்களும் மீனாட்சியும் புறப்படுகிறீர்களா? நான் எப்படியும் போகலாம் என்று இருக்கிறேன்" என்றாள் லட்சுமி அம்மாள்.

"போய் வாருங்கள், எனக்கு இப்பொழுது வரச் சரிப்படாது. மீனாட்சியை மட்டும் அழைத்துக்கொண்டு போங்கள்."

"மீனாட்சி மட்டும் வந்தால் என்ன பிரயோஜனம்? தம்பதிகளாகச் சேர்ந்து ஸ்நானம் செய்தால்தான் பலன் உண்டு."

"நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. நானும் மீனாட்சியும் இன்னும் கிழவர்கள் ஆகிவிடவில்லை. இன்னும் பத்து வருஷம் இப்படியே இருந்தால் ஜோடியாகப் போய் வருகிறோம்" என்று சிரித்தார் சுந்தரம்.

"சரிதான், போங்கள்! பேச்சு ரொம்ப நன்றாயிருக்கிறது!" என்று பொய்க் கோபம் காட்டினாள் மீனாட்சி.

"அப்படியானால் நான் மட்டும் புறப்படுகிறேன்" என்று முடித்து நழுவிவிட்டாள் லட்சுமி அம்மாள்.

"நாமும் போய்வரலாமே" என்று கெஞ்சினாள் மீனாட்சி.

"இதோ பார், மீனாட்சி, எனக்கு மூச்சுவிடக்கூடப் போதில்லை. இந்தா, இந்தச் சவுக்கத்தை வைத்துக் கொண்டு ஸ்நானம் செய்."

"ஐய! இந்தச் சவுக்கம் ஸ்நானந்தான் செய்யும். என் கூடப் பேசி நடந்து வருமா? சாப்பிடுமா?"

"சரிதான். உனக்குப் பதினைந்து வயசிலேயே பாப்பா வேண்டுமென்று ஆசை வந்துவிட்டது. இல்லாவிட்டால் என்னை ஏன் இப்படி விடேன் தொடேனென்று வம்பு செய்கிறாய்?"

இதை அவர் சிரித்துக்கொண்டே சொன்னார்.

மீனாட்சியை வெட்கம் கவ்விக்கொண்டது. வெட்கம் எரிச்சலாக மாறியது. "அப்படியா சொல்லுகிறீர்கள்? சரி, நீங்கள் வரவேண்டாம். தனியாகவே போய்விட்டு வருகிறேன். ராமேசுவர ஸ்நானம் என்று பேர்தான். மதுரை மீனாட்சி கோயில், அழகர் கோயில், திருப்பரங்குன்றம் இவற்றையெல்லாம் நாம் எப்போது பார்ப்பது? அதற்காகச் சொன்னால் என்ன என்னவோ சொல்கிறீர்களே!"

"நான் ஒன்றும் குற்றமாகச் சொல்லவில்லை. இப்பொழுது எனக்கு வேலை அதிகம். நீ பார்த்துவிட்டு வா; அவ்வளவுதானே?" என்று சொல்லி வெளியே போய்விட்டார் சுந்தரம்.

# 3

தாயும் மகளுமாக ராமேசுவர யாத்திரை செய்ததன் பயனாக ஒரு வருஷத்துக்குள்ளே சுப்பு பிறந்தான். அவன் பிறந்த வேளை நல்ல வேளை. சுந்தரம் தொட்டதெல்லாம் தங்கமாயிற்று.

வருஷங்கள் பதினேழு உருண்டோடிவிட்டன. சுப்பு காலேஜில் முதல் வருஷம் பி. ஏ. படித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது தான் மதுரை வக்கீல் குப்புசாமியும், வியாபார நிமித்தமாக மதுரைக் குப் போன சுந்தரமும் சந்தித்தார்கள். அவர்கள் பழக்கம் நீடித் தது. படிப்பாளியான மாப்பிள்ளையை விரும்பிய குப்புசாமி ஐயர், தம் பெண் சரஸ்வதியைச் சுப்புவுக்குக் கொடுத்துக் கல்யாணம் செய்தார்.

ஏழெட்டு மாதங்கள் சந்தோஷமாக ஓடின. 'மீனாட்சிக்குப் பிள்ளை பிறந்த வேளை பெருமையைத் தேடித் தந்தது; நாட்டுப்பெண் கால்வைத்த வேளை கஷ்டத்தின்மேல் கஷ்டமாக வருகிறது' என்று ஊரார் பேசிக்கொள்ளும்படி பல சந்தர்ப்பங்கள் நேர்ந்தன.

திடீரென்று லக்ஷ்மி அம்மாள் மூன்றே நாள் ஜுரமாகப் படுத்து இறந்தாள். வீட்டுப் பொறுப்பும் அநுபவமும் நிறைந்து, பெரிய துணையாக இருந்த தாயை இழந்த மீனாட்சி, இறகொடிந்த பட்சி யாகிவிட்டாள்.

சுப்புவுக்குப் பி. ஏ. இரண்டாம் வருஷம் தொடங்கியது. பெற் றோர் கீறிய கோட்டைத் தாண்டாத சாதுப்பிள்ளையாக இருந்த சுப்பு, இப்பொழுதெல்லாம் தன் மனம் போனபடி அலையத் தொடங்கிவிட்டான். இரவு எட்டு மணிக்கும் ஒன்பது மணிக்குந் தான் வீட்டுக்கு வருவான்.

ஒரு நாள் வியாபார விஷயமாக வெளியூர் போய் வந்த சுந்தரம் வாட்டத்துடன் உள்ளே நுழைந்தார். எப்பொழுதும் மீனு மீனு என்று பலக்கக் கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வரும் சுபாவம் உள்ள அவர், வந்த சுவடு தெரியாமல் மாடிக்குப் போய்விட்டது, அவளுக்குக் குழப்பத்தை உண்டாக்கியது. கையில் பலகாரமும் தீர்த்தமும் எடுத்துக்கொண்டு மாடிக்குப் போனாள். ஒருக்களித் துப் படுத்திருந்த அவர் இவளைக் கண்டதும் கைகளால் முகத்தை மறைத்துக்கொண்டார்.

"ஐயோ, இதென்ன, விளையாடுகிறீர்களா அல்லது கோபமா?" என்று அவர் கையை விலக்கினாள் மீனாட்சி. அவர் முகம் பேயறைந் ததுபோல் இருந்தது. இவள் பேச்சைக் கேட்டதும் கோபமாக மாறியது.

"ஆம், விளையாட்டுத்தான். அழகான பிள்ளையைப் பெற்று விட்டு, விளையாடத்தான் வேண்டும்; வயிறு கொதிக்கிறது! மானம்

பறிபோய்விட்டது. நம் நிலைக்கு மீறிய சம்பந்தம் வேறு செய்து விட்டேன். அந்த மனிதர் காதில் சங்கதி எட்டினால் நான் எப்படிப் பொறுப்பேன்? பச்சைக் கிளி போன்ற நாட்டுப் பெண் இன்னும் வீட்டுக்கே வரவில்லை. இப்பொழுது உன் பிள்ளையாண்டான் பழ காத கெட்ட பழக்கம் ஒன்று இல்லை.''

அவர் மேலே சொல்வதற்குள் மீனாட்சி தடுத்து, ''ஐயோ! நம் சுப்புவா இப்படிச் செய்கிறவன்? யாரேனும் வயிற்றெரிச்சலுக்குக் கிளப்பி விட்டிருப்பார்கள்'' என்றாள்.

''சட், வாயை மூடு! ஆறு மாத காலமாக அவன் வீட்டுக்கு வரும் நேரத்தைக் கவனிக்கிறாயா? உனக்கு எங்கே பிள்ளையைத் திருத்தத் தைரியம் வரப்போகிறது? கோயம்புத்தூரில் அவனுக்குத் துஷ்டக் கூட்டாளிகள் பலர் சேர்ந்துவிட்டார்கள். பணத்தைத் தண்ணீர் போலச் செலவழிக்கிறான். இன்று ரெயிலில் வரும்போது அவனைப்பற்றி இரண்டு பெரிய மனிதர்கள் பேசிக்கொண்டு போனதை என் காதாலேயே கேட்டேன். இல்லாவிட்டால் நானும் நம்பமாட்டேன். 'இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா?' என்பதுபோல் நம்மிடம் நடந்துகொள்கிறான். நான் செய்த பாவம்!''

மீனாட்சி இத்தனை நேரம் துக்கத்தை அடக்கி வைத்திருந்தவள், குழந்தைபோல் அழுதுவிட்டாள். சுந்தரத்தின் கால்களைப் பிடித்துக் கொண்டு, ''எப்படியாவது அவனை இந்தப் படுகுழியிலிருந்து மீட்க முயல்வோம். நீங்களே இப்படித் தளர்ந்துவிட்டால் நான் எப்படிப் பொறுப்பேன்?'' என்று அவரைத் தேற்றப் பார்த்தாள்.

## 4

அன்று இரவு வீட்டுக்கு வந்த சுப்பு பெற்றோரின் சோகத்தைக் கண்டு திடுக்கிட்டான். 'எப்படியோ இவர்களுக்குச் செய்தி எட்டி விட்டது' என்பதைப் புரிந்துகொண்டான். சுபாவத்தில் தைரியம் இல்லாதவன் ஆகையால் வரப்போகும் புயலை எப்படிச் சமாளிப்ப தென்று கவலைப்பட்டான்.

கடைசியில் துணிந்து கேட்டவள் மீனாட்சிதான். ''ஏண்டா சுப்பு, ஊரில் உன்னைப்பற்றி ஏதேதோ புகார் சொல்லுகிறார்களே, அவையெல்லாம் நிஜந்தானடா? நாங்கள் உன்னை மார்பிலும் தோளிலும் அருமையாகச் சுமந்து வளர்த்ததற்கு இதுதானா பலன்! அப்பாவுக்கு நீ ஒழுங்காக இருக்கிறாய் என்பது தெரியாவிட்டால், அவர் உயிரையே விட்டுவிடுவார். அவர் பக்கத்தில் உட்கார்ந்து, சமாதானமாக ஒரு வார்த்தை சொல்லடா'' என்று பொரிந்து தள்ளி விட்டாள்.

அவளுடைய இந்த எதிர்ப்பு, மின்னலும் இடியும் சேர்ந்த மழை போல் சுப்புவின் மனத்தைத் தாக்கியது. ''அம்மா, நான் தப்பு வழி யில் போகமாட்டேன், அம்மா. ஏதோ டிராமா, சர்க்கஸ் என்று

சிநேகிதர்களுடன் போனுல் யாரோ கதை கட்டிவிட்டிருகிறுர்கள். இனிமேல் பார், தினந்தோறும் நான் சீக்கிரம் வீட்டுக்கு வந்துவிடு கிறேன்'' என்று சொல்லிவிட்டுத் தகப்பனுரைப் பார்க்கப் போனுன்.

அவரை நிலைகுலைந்த கோலத்தில் பார்த்ததும் அவனுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. அவர் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, "அப்பா, அப்பா, நான் தெரியாத்தனமாகத் தவறு செய்துவிட்டேன். இனிமேல் தப்புத் தண்டாவுக்கே போக மாட்டேன்'' என்று அழுதான்.

சுந்தரம் சற்றுத் தெளிந்தாற்போல் காணப்பட்டார். 'அழுகிற ஆளையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பாதே' என்கிறது பழமொழி. அது பொய்யாகுமா? பி. ஏ. பரீட்சையில் சுப்பு கோட்டை விட்டு விட்டான். பழைய நண்பர்களின் தொடர்பு மறுபடியும் உறுதியாகப் பிடித்துக் கொண்டது. இப்பொழுது அவன் வீட்டுக்கு இரவு நேரம் முழுவதுமே ஒவ்வொரு நாள் வரமாட்டான்.

சுந்தரம் அவமானத்தாலும் ஏக்கத்தாலும் குன்றிப் போய்விட்டார். மதுரைக்குத் தந்தி கொடுத்துச் சம்பந்தியைத் தருவித்தார். குப்புசாமி ஐயர் வந்தார். அவரைக் கண்டதும் சுந்தரம் ஹோவென்று கதறி விட்டார். "அத்தி பூத்தாற்போல் ஒரு பிள்ளை, லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்தைப் பொறுப்புடன் கட்டியாளத் தகுந்தவன், அறிவாளி என்றெல்லாம் மனக்கோட்டை கட்டினேன், குப்பண்ணு, என் எண்ணத்தில் மண் விழுந்தது. உமது குடும்பத் துக்கும் தாங்க முடியாத துக்கம், நான் என்ன செய்வேன்!'' என்று புலம்பினுர்,

குப்பண்ணு மலைபோன்ற உறுதி உடையவர். "மனத்தை அலட்டிக்கொள்ளாதீர்கள். உலகத்தில் இதெல்லாம் சகஜம். நம் சுப்பு மறுபடி திருந்தக்கூடாதா? நாம் பதற்றப்படாமல் நிதானமாக இருந்து திருத்திவிடலாம், தைரியமாக இருங்கள்'' என்று சமா தானம் சொல்லிவிட்டுப் போனுர்.

ஐந்தாறு மாதங்கள் ஓடிவிட்டன. சுந்தரம் பாயோடு படுத்து விட்டார். பிள்ளையின் குணம் திருந்தாது என்ற கவலையால் அவரை இருதய நோய் பற்றிக்கொண்டது. திடீரென்று ஒரு நாள் உயிரை விட்டார். சுந்தரத்துக்கு உடம்பு ஜாஸ்தியாக இருந்தபோதுகூடப் பிள்ளையாண்டான் வீட்டில் இல்லை. அவனைத் தேடிப் பிடிக்க ஆள் அனுப்ப வேண்டியிருந்தது.

ஈமக்கடன்கள் முடிந்தபின் சொத்துக்களின் நிலவரத்தைப் பார்வையிட்டார் சம்பந்தி. ஆறு மாதத்துக்குள் இருபத்தையாயிரம் ரொக்கமாகச் சுப்புவால் கரைந்திருந்தது.

சுந்தரம் சாகுமுன் குப்பண்ணுவும் சுந்தரமும் சேர்ந்து, மிகுந்த குடும்பச் சொத்துக்களை அவன் விற்கவோ கடன் வாங்கவோ முடியாதபடி மீனுட்சியின் பேரில் எழுதி வைத்திருந்தார்கள்.

வெல்லம் இல்லாத இடத்தில் ஈக்களுக்கு வேலை ஏது? புதிய நண்பர்கள் சுப்புவை விட்டு விலகினர்கள். சுப்புவும் மீனாட்சியும் கொஞ்ச காலம் ஊரைவிட்டே விலகியிருப்பது நன்மை என்று நினைத்த குப்பண்ணா, அவர்களை மதுரைக்கு அழைத்துப் போனார்.

மீனாட்சிக்கு எதுவுமே பிடிக்கவில்லை. அவள் உடல் நாளுக்கு நாள் மெலிந்து வந்தது. அவளுக்கு இனிப் பிழைப்போம் என்ற நம்பிக்கை இல்லை. குப்பண்ணாவிடம் பேச்சுவாக்கில் தான் அடுத்த வாரம் சிங்காநல்லூருக்குப் புறப்படப் போவதாகச் சொன்னாள். அவர் அவளைத் தடுத்துப் பார்த்தார். அவள் சம்மதிக்கவில்லை. பிறகு பெண் சரஸ்வதியையும் மாப்பிள்ளையையும் சேர்த்து ஊருக்கு அனுப்பி வைத்தார்.

## 5

சரஸ்வதி மிக நல்ல பெண். சுபாவத்திலேயே அன்பும் அடக்கமும் நிறைந்த அவள், தன் மாமியாருடைய மன நிலைக்கு மிகவும் இரங்கி, அவள் மனம் கோணாமல் நடந்து வந்தாள். மீனாட்சியின் விடிவில்லாத கஷ்டத்துக்கு அவள் விடிவெள்ளிபோல் அமைந்தாள். மீனாட்சி சரஸ்வதியைப் பார்த்துச் சில சமயங்களில், "அம்மா, நீ சிறு பெண். என் கஷ்டத்தை நீக்கிவிடலாமென்று நினைக்கிறாய். நான் மகா பாவி. என்னைப்பற்றி நினைக்காதே. உன் அகமுடையானுக்கு வேண்டியதைச் செய். காலேஜில் அவன் முதல் மூன்று வருஷம் படித்த மாதிரியில் ஐ. ஸி. எஸ். ஸுக்குக் கூட அவனை அனுப்ப நினைத்தோம். நம் அதிருஷ்டந்தான், அவன் புத்தி குறுக்கே பாய்ந்தது. வெறும் பி. ஏ. என்ற வாலைக்கூட ஒட்டிக் கொள்ள முடியாமல் போய்விட்டது. படிப்புப் போனால் போகிறது. இருப்பதை வைத்துக் கொண்டு நாலு தலைமுறைக்குத் தள்ளலாம். ஆனால் வேலையில்லாத அவன் இள மனசு எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி, எப்படி வருந்துகிறதோ! நீ மட்டும் அவன் மனம் நோகும்படி ஒன்றும் சொல்லாதே. நீங்கள் இருவரு மாவது சந்தோஷமாக இருந்தால்தான் என் குடும்பம் விளங்கும்" என்று அடிக்கடி சொல்வாள்.

சரஸ்வதி, "சரி, சரி" என்று கேட்பாள். அவளுக்கு ஒன்றும் சரியாகப் புரியாது. அவள் கணவன் முன்போல் ஊதாரியாகத் திரிந்து ஊர் சுற்றவில்லை. தகப்பனார் இறந்து, தாய் சோகமே உருவாக மெலிந்து உருகுவதைக் கண்டதும் அவன் அடியோடு மாறிவிட்டான். சரஸ்வதியின் ஏக்கம் தேங்கிய விழிகள் அவனைப் புனிதமாக்கிவிட்டன. வீண் பொழுது போக்குவதுதான் அவனால் சகிக்க முடியாமல் இருந்தது. அவன் மனசுக்கு ஓயாத வேலை கொடுக்க, மற்றொரு துன்பத் தொடர் சூழ்ந்தது.

மீனாட்சியின் உடம்பு இளைத்ததோடு இருமலும் ஆரம்பித்தது. அவள் வைத்தியம் செய்துகொள்ள மறுத்துவிட்டாள். ''நான் செய்த பாவத்தை நானே அநுபவித்துவிடுகிறேன். அதற்கு மாற்றுத் தேட வேண்டாம்'' என்று சொல்லி வந்து, கடைசியில் படுத்த படுக்கையாகி விட்டாள்.

சரஸ்வதிக்குத் திகில் பிடித்துக் கொண்டது. சுப்புவிடம் சொல்லி டாக்டரைத் தருவித்து, மாமியாரைப் பரீட்சிக்கச்செய்தாள். டாக்டர் உள்ளே நுழைந்ததுமே மீனாட்சியின் உடம்பைக் கண்டு பிரமித்து நின்று விட்டார். பரீட்சித்துவிட்டு, ஏதேதோ மருந்து சொன்னார். வெளியே போகும்போது, சுப்புவை அழைத்துக் கொண்டு போய், "உங்கள் தாயாருக்கு க்ஷயம் வந்து முற்றிவிட்டது. அதோடு இருதயமும் பலவீனமாக இருக்கிறது. ஏதோ மன நோய் பீடிப்பதால்தான், அபாயமான நிலைக்கு உடல் வந்துவிட்டது" என்று சொன்னார்.

சுப்பு பேசவே இல்லை. கற்சிலை போல் நின்று விட்டான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. டாக்டர் அநுதாபத்துடன், ''கவலைப்படாதீர்கள். அந்த அம்மாள் மனசில் இருப்பதை அறிந்து, கவலையை நீக்கினால் ஒரு வேளை குணமாகலாம்'' என்றார்.

"நான் செய்த பாவம்!" என்று அவன் வாய் முணுமுணுத்தது.

டாக்டர் சொன்ன மருந்துகளை வாங்கவே விடவில்லை மீனாட்சி. ''அம்மா, நான் சிறு பிள்ளைத்தனமாக ஏதோ தவறி நடந்து விட்டேன். அதற்காக நீ உன்னையும் வருத்திக் கொண்டு என்னையும் வருத்துகிறாய். பாட்டியும் அப்பாவும் போன துக்கம் தீருமுன் நீயும் எங்களை நிராதரவாக விட்டுப் போனால் நாங்கள் தாங்குவது எப்படி? நான் இப்பொழுது ஒழுங்காக இருக்கவில்லையா? மருந்து சாப்பிட்டு உடம்பைத் தேற்றிக்கொள்'' என்று சுப்பு கெஞ்சினான்.

"இனிமேல் மருந்து எதற்கப்பா?" என்று மழுப்பினாள் மீனாட்சி.

ஒருநாள் விடியற்காலை ஐந்து மணி இருக்கும். சிரமப்பட்டு இருமிய மீனாட்சி, ரத்தம் கக்கினாள். சுப்புவைப் பக்கத்தில் அழைத்தாள். ''அப்பா குழந்தை, நான் இனிப் பிழைக்க மாட்டேன். இந்தா, அழாதே. நான் சொல்வதைக் கவனமாகக் கேள். அதற்குப் பரிகாரம் தேடினால்தான் நம் குடும்பம் சீர்ப்படும்;என் ஆத்மா சாந்தி அடையும். இதோ பெட்டி, கவர். நான் போன பிறகு இந்தக் கவரில் இருக்கும் கடிதத்தை நீ படித்துவிட்டு, அதில் காணப்படும் பாகீரதியைப் பற்றிக் கல்லிடைக்குறிச்சியில் விசாரி. அவளை நீ எப்படியாவது கண்டு பிடித்து, அவளிடம் கடிதத்தையும் பெட்டியையும் சேர்த்து விடு'' என்று சொல்லி ஒரு கவரையும் பெட்டியையும் அவனிடம் கொடுத்தாள். பிறகு சரஸ்வதியையும் அழைத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டாள். ''நான் செய்த பாவம்; நான் உள்ள

வரையில் உங்களுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. நான் அளவுக்கு மேல் கஷ்டத்தை அநுபவித்து விட்டேன். கவலைப்படாதீர்கள். நீங்கள் ஆயிரம் காலம் குழந்தை குட்டிகளோடு சௌக்கியமாக இருப்பீர்கள்'' என்று ஆசீர்வதித்தாள். "அம்பிகே, அம்பிகே'' என்ற தியானத்தோடு அவள் உயிர் பிரிந்தது.

## 6

ஆடி மாதம்; வெள்ளிக்கிழமை. ராமேசுவரம் கோயிலில் உத்ஸவம் நடக்கிறது. ராமேசுவரம் புதுத் தெருவில் ஒரு சத்திரம். அதன் ஒரு பகுதியில் இறங்கியிருந்த டாக்டர் ராமநாதனை ஓர் ஆசாமி தேடி வந்தான். டாக்டர் அவனை வரவேற்று, உட்கார வைத்தார்.

"உங்களுக்கு என்ன வேண்டும்? நீங்கள் யார்?" என்று டாக்டர் கேட்டார்.

"சற்றுத் தனியாகப் பேச முடியுமா?" என்றான் புது ஆசாமி.

"அதற்கென்ன? இங்கேயே பேசலாம். என் தாயார்தான் இவர்கள். சங்கோசமில்லாமல் சொல்லுங்கள்."

முதலில் சற்றுத் தயங்கிய புதியவன் பிறகு தைரியப்படுத்திக் கொண்டு, ''நான் இருப்பது கோயம்புத்தூருக்குப் பக்கத்திலுள்ள சிங்காநல்லூர். என் பெயர் சுப்பிரமணியம். நானும் என் மனைவியும் உங்கள் தாயாரைத்தான் தேடி வந்தோம். பழக்கம் இல்லாத ஒரு மனிதர் உங்களைத் தேடி வந்து அடைக்கலம் புகுந்தால் காப்பாற்றுவீர்களா? முன்பின் தெரியாத என்னை வரவேற்றுப் பேச அநுமதித்த உங்களிடம் விஷயத்தைச் சொல்லவே நா எழவில்லை. இந்தக் கடிதம்.........'' என்றான்.

"ஒன்றும் புரியவில்லையே! இப்படிக் கொடும், உட்காரும்" என்று சொன்ன டாக்டர் அந்தக் கடிதத்தை வாங்கிப் பிரித்தார். கடிதத்தில் அவருடைய தாயின் பெயர் இருந்தது. கவரைத் திருப்பிப் பார்த்தார். அதன் மேலும் அவள் பெயரே இருந்தது.

"அம்மா" என்று கூப்பிட்டு, "இது உனக்கு எழுதிய கடிதம். இந்தா அம்மா" என்றார் டாக்டர்.

"நீதான் படியேண்டா கேட்கிறேன்" என்றாள் அம்மா.

டாக்டர் கடிதத்தைப் படித்தார் :

சிங்காநல்லூர்
24 - ஜூன், 1954

சகோதரி பாகீரதிக்கு நமஸ்காரம். நான் யார், ஏன் உனக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன் என்பவை படிக்கப் படிக்கத் தெரியும்.

இருபத்தாறு வருஷங்களுக்குமுன் தனுஷ்கோடிக்கு ஆடி அமாவாசை ஸ்நானத்துக்கு வந்தது உனக்கு நினைவு இருக்கிறதா? நினைவில்லாமல் எப்படி மறக்கும்! எனக்கு அந்த நினைவு அப்பொழுது அதிகமாக இல்லை. சென்ற ஏழெட்டு வருஷங்களுக்குள் அந்தச் சம்பவத்தை நெருப்புத் துண்டத்தைக் கொண்டு என் நெஞ்சில் எழுதி விட்டது விதி. ஆடி அமாவாசை, வெள்ளிக் கிழமையுங்கூட! விடியற்காலை. தனுஷ்கோடியில் ஸ்நான கட்டத்துக்கு நானும் என் தாயும் வந்து கொண்டிருந்தோம். உம், எப்படி எழுதுவேன்! எழுதாவிட்டால் என் மனம் சாந்தி அடையாது. என் காலில் ஏதோ கனமான பொருள் தட்டுப்பட்டது. குனிந்து எடுத்தேன். திருமங்கல்யமும் மோகராக்களும் கோத்த நாயுருவிக் கொடி. அன்று அந்த விநாடியில் அது நெருப்பாகத்தான் என் கண்ணுக்குப் பட்டது.

"அம்மா!" என்றேன். பிரமிப்பால் பேச்சு வரவில்லை. என் தாய் மிக மிகச் சூட்சும புத்தி உள்ளவள். உடனே அதைப் பார்த்தாள். அப்படியே அதைக் கையில் இருந்த சவுக்கத்தில் சுற்றி வைத்துக்கொண்டு, "பேசாதே" என்று ஜாடை காட்டினாள்.

எங்களைத் தாண்டிக்கொண்டு வட நாட்டுக் கோசாயிக்கூட்டம் ஒன்று போயிற்று. "யாருடையதோ? பாவம்!" என்றேன்.

என் தாய், "யாரோ ஆயிரம் பேர்! சந்தையில் கிடைத்த பொருளை எல்லாருமே 'என்னுடையது' என்றுதான் சொல்லுவார்கள். உடைமைக்காரியை நீ தேடிப் பிடிக்கப் போகிறாயா? நாம் ஒருவர் வீட்டில் கன்னம் வைக்கவில்லை; தானாகக் காலில் தட்டுப்பட்டது. வலிய வந்த சீதேவியை' வெள்ளிக்கிழமையும் தானுமாக உதறித் தள்ளாதே; வாயை மூடிக்கொண்டிரு" என்று என்னை அடக்கி விட்டாள்.

ஸ்நானம் நூற்றெட்டு முடிந்து திரும்பும் வரையில் கொடி நழுவியதை நீ கவனிக்கவில்லையாம். அதற்குள் நாங்கள் சாதாரணமாக ஸ்நானத்தை முடித்துக்கொண்டு திரும்பி விட்டோம்.

சமுத்திரக் கரையில் உன் மாமியாரும் கணவனும் உன்னை வாயில் வந்தபடி வைதார்களாம். கரையெல்லாம் சல்லடை போட்டுச் சலித்தார்களாம். இருந்தால்தானே அகப்படும்? நகையையும் பறி கொடுத்து, மாமியாரிடமும் கணவனிடமும் வசவு வாங்கிக் கொண்டு தவித்த அப்பாவியாகிய உன்னைக் கண்டு இரங்கிய சிலர், உனக்குப் பின்னால் நாங்கள்தாம் வந்தோம் என்று சொன்னதால் நாங்கள் இறங்கியிருந்த சத்திரத்துக்கு நீயும் உன் கணவனும் மாமியாரும் வந்து எங்களிடம், "கொடியைப் பார்த்தீர்களா?" என்று சம்பிரதாயமாகக் கேட்டுவிட்டு, "நீங்கள்தாம் எங்களை அடுத்து வந்தீர்கள். தயவு செய்து கொடுத்து விடுங்கள்" என்று கேட்டீர்கள்.

மாமியாருக்குப் பின் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற நீ, "ஆடி வெள்ளிக்கிழமை; ஒரு திருமங்கல்யத்தையாவது கொடுத்து விடுங்கள்!" என்று பரிதாபமாகக் கேட்டாய்.

உன் முகத்தில் தோன்றிய சோகம், "உள்ளதைச் சொல்லிவிட வேண்டும். கொடுத்துவிட வேண்டும்" என்று என்னைத் தூண்டியது. என் உள்ளம் தவித்தது.

ஆனால் அம்மா அதற்குள் பெட்டி பேழை எல்லாவற்றையும் உதறிக் காட்டி விட்டாள். எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. எங்கும் கொடி இல்லை. நீங்கள் போய் விட்டீர்கள். இல்லை என்ற பின் அதைச் சாதிப்பதையே நோக்கமாகக் கொண்ட அம்மா, பழைய தலையணையைத் துளைத்து அதை அதில் செருகியிருந்தாள். தையல்கூடப் போடவில்லை. ஊருக்கு வந்தபின் அதை எடுத்து அவள் காண்பித்தபோதுதான் எனக்கு விஷயம் தெரிந்தது.

நான் என்ன என்னவோ சொன்னேன். "போடி, கொடுத்தால் உடனே கூப்பிட்டுக் கொடுத்திருக்க வேண்டும். இனிமேல் சொன்னால் சிறைவாசந்தான் கிடைக்கும்" என்றாள். உடனே நான் கம்மென்று இருந்துவிட்டேன்.

நாளடைவில் அதை ஒரு வகையாக மறந்தே விட்டேன்? அல்லது மறந்ததாகப் பாவித்தேன். ஊரார் பொருள் தூமகேது என்பதை நான் அநுபவத்தில் அறிந்தேன். உன் நகையைத் தயவு செய்து பெற்றுக்கொள். அதைப் பழைய உருவில் கொடியாகவே வைத்திருக்கிறேன். அதை அழித்துச் சங்கிலியாகப் பண்ணி, நான் கழுத்தில் அணிந்தது முதல் என் குடியையே அது பழி வாங்கி விட்டது!

நான் பதினைந்து வயசு அறியாச் சிறுமியாக இருந்தபோது செய்த குற்றத்தைப் பெரிய மனசு செய்து, நான் பட்ட கஷ்டங்களுக்கு இரங்கியாவது மன்னித்துவிடு. என் ஒரே குழந்தையாகிய இவனுக்கு உன் ஆசீர்வாதந்தான் வாழ்வு தர வேண்டும்.

உன் மன்னிப்பைக் கோரும், மீனாட்சி.

இதை டாக்டர் ராமநாதன் படித்தபோது, வைத்த கண் வாங்காமல் திறந்த வாய் திறந்தபடியே அவர் தாய் பாகீரதி நின்றவள் நின்றவள்தான்! கடிதத்தைப் படித்து முடித்ததும் ஒரு நீண்ட பெருமூச்சு அவளிடமிருந்து வெளிவந்தது. கண்களில் நீர் நிறைந்து வழிந்தது. கண்ணீர் வழியச் சோகமே உருவாக உட்கார்ந்திருந்த சுப்பு, திடீரென்று எழுந்து பாகீரதியம்மாளின் காலில் விழுந்து அவள் காலை இறுகப் பிடித்துக்கொண்டு கேவு கேவென்று கேவினான். ஒன்றும் புரியாமல் குழம்பிய ராமநாதன் அவர்கள் இருவரையும் பார்த்தவண்ணம் பேச்சற்று நின்றிருந்தார்.

சற்று நேரத்திற்குப் பின் முதலில் தெளிவு பெற்ற பாகீரதி சரேலென்று சுப்புவை வாத்ஸல்யத்தோடு தோளைப் பிடித்து எழுப்பினாள். "அப்பா, குழந்தை, எழுந்திரு. நடந்தது நடந்து விட்டது. அது போன ஆரம்பத்தில் நான் எவ்வளவோ கஷ்டப்பட்டாலும், பின்னால் தெய்வம் எனக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. பாவம்! உன் தாய் மீனாட்சி நிரபராதி. அவள் அம்மாவை மீறி என்ன செய்ய முடியும்? ஒன்றுக்கும் கவலைப்படாதே, அப்பா. இவ்வளவு நல்ல மனுஷியான மீனாட்சி பட்ட கஷ்டங்களை நினைத்தாலே மனம் நடுங்குகிறது. அவள் மகனான உனக்கு ஒரு குறைவும் வராது" என்று மனப்பூர்வமாகக் கண்ணீரும் கம்பலையுமாக ஆசீர்வதித்தாள்.

"இதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கீழே இருந்த நகைப் பெட்டியை எடுத்துச் சுப்பு பாகீரதியம்மாளிடம் நீட்டினான்.

பாம்பைக் கண்டவள்போல் பின் வாங்கிய பாகீரதி அம்மாள், "அப்பா, அதை நான் இனிமேல் கையாலும் தொட மாட்டேன். இவ்வளவு கஷ்டங்களையும் பட்டு இதைத் திருடி மறைத்த பாவத்தைக் கழுவிய உன் அம்மாவுக்கும் உனக்குந்தான் இது இனிமேல் சொந்தம். எங்களுக்குப் பகவான் எந்தவிதமான குறையும் வைக்கவில்லை. இதை உன் மனைவியின் கழுத்தில் போடு. நான் சொல்வதைக் கேள்" என்றாள் பாகீரதி.

"இதை நினைத்தாலே என் நெஞ்சு நடுங்குகிறது. இதனால் நாங்கள் பட்ட கஷ்டங்கள் ஏழு தலைமுறைக்கும் போதும். இதை நீங்கள் ஏற்றுக் கொண்டால்தான் இனிமேல் எனக்கு வாழ்வு!" என்று மீண்டும் சுப்பு, நகைப் பெட்டியைப் பாகீரதியின் காலடியில் வைத்தான்.

திடீரென்று ராமநாதன் குனிந்து நகைப் பெட்டியை எடுத்து, "அம்மா, இன்று ஆடி வெள்ளிக்கிழமை. இன்று இதைப் பார்வதவர்த்தனி அம்மனுக்கு அர்ப்பணம் செய்துவிடலாமே. அவள் ஏற்றுக்கொண்டு இரண்டு குடும்பத்தையும் வாழ வைக்கட்டுமே" என்றார்.

கோயிலிலிருந்து அடித்த மத்தியகால மணிச் சத்தம் டாண் டாண் என்று கேட்டது.